நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No. 849/2025**

**P.W.7 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சதீஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | நடராஜன் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 34 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 17 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இன்று ஆஜரில் இல்லாததாலும் சாட்சி மற்றும் தரப்பினர்கள் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும் மேற்படி சாட்சியை விசாரணை செய்யாமல் திருப்பி அனுப்புவது வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்படுத்தும் என்பதாலும் நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்கிறது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.45 PM

1. நான் தற்போது குள்ளவீரன்பட்டியில் குடியிருந்து மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் நான் பேருந்து நிலையத்திற்கு பொருட்கள் வாங்க வந்தபோது போலீசார் எனது முகவரியை கேட்டு எழுதி வாங்கிக்கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து செய்தேன்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.47 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**